வகுப்பு : 9 | 9 | 1 | 1 | 2 |

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு– 2024

நேரம் : 1.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 50

## பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7x1=7

1. பொருத்தமான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| 1. சிறுபஞ்சமூலம் | – | காப்பிய இலக்கியம் |
| 2. குடும்ப விளக்கு | – | சங்க இலக்கியம் |
| 3. சீவகசிந்தாமணி | – | அற இலக்கியம் |
| 4. குறுந்தொகை | – | தற்கால இலக்கியம் |

(அ) 1–3, 2–4, 3–1, 4,– 2 (ஆ) 1–2, 2–3, 3–3, 4–4
(இ) 1–3, 2–1, 3–4, 4–2 (ஈ) 1–4, 2–1, 3–2, 4–3

2. திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ————
(அ) விலங்கு உருவங்கள் (ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
(இ) தெய்வ உருவங்கள் (ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

3. குடும்ப விளக்கு எவ்வகை இலக்கியம்?
அ) காப்பிய இலக்கியம் ஆ) சங்க இலக்கியம்
இ) அற இலக்கியம் ஈ) தற்கால இலக்கியம்

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1. ‘ஆ’ என்பது எதிர்மறை இடைநிலை.
2. வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப் பேச்சு.
3. வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்
(அ) 2,3 சரி; 1 தவறு (ஆ) 1,3–சரி; 2 தவறு (இ) மூன்றும் சரி (ஈ) மூன்றும் தவறு

5. ‘உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே’ என்றவர் யார்?
அ) அண்ணா ஆ) பெர்னாட்ஷா இ) கதே ஈ) மில்டன்

பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி. (6,7)

*“வானூர்தி செலுத்தல் வைய*
*மாக்கடல் முழுது மளத்தல்*
*ஆளச் செயலும் ஆண்பெண்*
*அனைவர்க்கும் பொதுவே? இன்று”*

6. ‘மாக்கடல்’–இலக்கணக் குறிப்புத் தருக.
அ) தொழிற்பெயர் ஆ) உவமைத்தொகை இ) உரிச்சொல் தொடர் ஈ) உம்மைத்தொகை

7. ‘வையம்’ –என்பதன் பொருள் என்ன?
அ) பெரிய கடல் ஆ) கடல் இ) மலை ஈ) உலகம்

## பகுதி – II

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5X2=10

8. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?
9. நடுகல் என்றால் என்ன?



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

10. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

11. இடிகுரல், பெருங்கடல் இலக்கணக்குறிப்புத் தருக.

12. கலைச்சொல் தருக.

அ) Combination ஆ) Sentence

13. இடைச்சொற்களால் தொடர்களை இணைக்க.

அ) பழனிமலை பெரியது; இமயமலை மிகப்பெரிது.

ஆ) கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

14. 'தலை' என்று முடியும் குறளை எழுதுக.

## பகுதி–III

**III.எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3X3=9

15. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

16. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

17. கைபிடி, கைப்பிடி– சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

18. இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.

19. 'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் மனப்பாடப் பாடலை எழுதுக.

20. இடைச்சொற்களின் வகைகள் ஏதேனும் மூன்றை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

## பகுதி – IV

**IV.எவையேனும் மூன்றனுக்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 3X4=12

21. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

22. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



23. தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி வேண்டி பதிப்பகத்திற்குக் கடிதம் எழுதுக.

24. உன்னை மகிழச் செய்த பணிகளை எழுதுக.

25. மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

அ) எட்டாக்கனி ஆ) உடும்புப்பிடி இ) கிணற்றுத்தவளை

ஈ) மேளதாளத்துடன் உ) எடுப்பார் கைப்பிள்ளை

## பகுதி – V

**V.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2X6=12

26. தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலையும் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

27. நூலகம் மற்றும் நூல்கள் குறித்த அண்ணாவின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

28. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் செய்தி கதையின் மூலமாக விளக்குக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com